

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நேற்று (12.06.2024) தலைமைச் செயலகத்தில், 2024–25 நிதி ஆண்டிற்கான பள்ளிக்கல்வித்துறை மானியக் கோரிக்கை, கொள்கை விளக்கக் குறிப்பு மற்றும் புதிய அறிவிப்புகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பள்ளிக் கல்வித் துறை அரசு செயலாளர் ஜெ.குமரகுருபரன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் ஆர். கஜலட்சுமி , ஆசிரிய தேர்வாணையத் தலைவர் வெங்கடப்பிரியா, தமிழ்நாடு மாதிரி பள்ளிகள் உறுப்பினர் செயலர் சுதன், (ஓய்வு) பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் முனைவர் க.அறிவொளி, தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், தனியார் பள்ளிகள் இயக்குநர் முனைவர் மு. பழனிச்சாமி, பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநர் எஸ்.நாகராஜமுருகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் கேப்டன் கே.ஜி.ராஜன் அவர்களின் பேத்தியும் ஜி.என்.வேலன் அவர்களின் மகளுமான ரோஷினி – அருண்குமார் இணையரின் திருமண வரவேற்பு விழாவில் பங்கேற்று, மணமக்கள் இருவரும் கலைஞரும் தமிழும் போல பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தினார்.

### தமிழ்நாடு அரசு ஊழியர்கள் - ஓய்வூதியர்களுக்கு

# மருத்துவக் காப்பீடு திட்டம் தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகள் அரசாணை வெளியீடு!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிக்கை!

சென்னை, ஜூன் 13 - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாடு அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்களுக்கு புதிய மருத்துவக் காப்பீடு திட்டம் 2021 மற்றும் 2022 செயல்படுத்துவது தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகளை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் அரசு ஊழியர்களுக்கு 01.07.2021 முதல் 30.06.2025 வரையிலும், ஓய்வூதியர்களுக்கு 01.07.2022 முதல் 30.06.2026 வரையிலும் தொடர்ந்து 4 ஆண்டுகள் மருத்துவக் காப்பீடு திட்டத்தை அமல்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

அரசு ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர், ஓய்வூதியர்களுக்கு அரசு மருத்துவமனைகளில் கட்டணமில்லாமல் சிகிச்சை பெற ரூ.5 லட்சம் மற்றும் சில குறிப்பிட்ட நோய்களுக்கு ரூ.10 லட்சம் வரை மருத்துவ உதவி பெற வழிவகை செய்கிறது.

புதிய மருத்துவக் காப்பீடு திட்டத்தில் உள்ள அரசு ஊழியர்கள், ஓய்வூதியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர், தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவமனைகளில் கட்டணமில்லாமல் மருத்துவ சிகிச்சை பெறமுடியும். சிகிச்சை பெற விரும்புவோர், மருத்துவக் காப்பீடு திட்ட அடையாள அட்டையுடன், சம்பந்தப்பட்ட அரசு மருத்துவமனையில் இதற்கென பணியில் இருக்கும் ஒருங்கிணைப்பு அலுவலரை அணுக வேண்டும்.

அரசு மருத்துவமனைகளில் சிகிச்சைக்கான முன் அனுமதி பெற்ற பின்னர், சிகிச்சையை தொடங்க வேண்டும் எனினும், எதிர்பாராத சூழல் ஏற்பட்டால், மருத்துவ சிகிச்சையை உடனடியாக தொடங்கி, பின்னர் 48 மணி நேரத்துக்குள் முன் அனுமதி மற்றும் தேவையான இதர ஆவணங்களைப் பெற வேண்டும்.

இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்களாக கட்டணமில்லா மருத்துவ சிகிச்சை, ரூ 5 லட்சம் வரை மருத்துவ சிகிச்சைக்கான செலவு, சில குறிப்பிட்ட வகையான நோய்/சிகிச்சைகளுக்கு ரூ.10 லட்சம் வரை மருத்துவ உதவி பெறலாம், 203 நோய்கள் மற்றும் அறுவை சிகிச்சைகளுக்கு இத்திட்டத்தின் மூலம் பயன் பெறலாம், அரசு மருத்துவமனைகளிலுள்ள அனைத்து கட்டண படுக்கை பிரிவுகளில் இத்திட்டத்தின் மூலம் சிகிச்சை பெறலாம் போன்ற வசதிகள் உள்ளது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

### திண்டுக்கல் கிழக்கு - மேற்கு மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்வீர் !

# ஜூன் 15ஆம் தேதி கோவையில் முப்பெரும் விழா!

## அமைச்சர் அர.சக்கரபாணி - இ.பெ.செந்தில் குமார் அறிக்கை!





திண்டுக்கல், ஜூன் 13- திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்டக் கழகச் செயலாளர்கள் - அமைச்சர் அர.சக்கரபாணி, இ.பெ.செந்தில் குமார் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

வருகின்ற ஜூன் 15ஆம் தேதி மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர், கொடிசியா மைதானத்தில் தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான தளபதியார் அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்களும் கலந்து கொள்ளும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியளித்த தமிழக மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா, சீர்மிகு வெற்றிக்கு கழகத்தை வழி நடத்திச் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்கு பாராட்டு விழா என "முப்பெரும் விழா" பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

ஆகவே, இக்கூட்டத்தில் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டத்திலுள்ள மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி பேரூர் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கிளை, வார்டு செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள் என அனைவரும் தவறாது கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி, மாவட்டச் செயலாளர் இ.பெ. செந்தில்குமார் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

### ஜூன் 15 ஆம் தேதி கோவையில் முப்பெரும் விழா!

# தென்காசி வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!



தென்காசி, ஜூன் 13 - ஜூன் 15ஆம் தேதி மாலை 400 மணி அளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சி தலைவர்கள் கலந்து கொள்ளும் "முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில்"

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் பெரும் திரளாக கலந்து கொள்ள வேண்டும்.என தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அது பற்றிய விவரம் வருமாறு.

வருகிற ஜூன் 15ஆம் தேதி மாலை 4.00 மணி அளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சி தலைவர்கள் கலந்து கொள்ளும் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா, சீர்மிகு வெற்றிக்கு கழகத்தை வழிநடத்திச் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு பாராட்டு விழா, என"முப்பெரும் விழா"பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் தென்காசி வடக்கு மாவட்டத்தில் உள்ள மாநில,மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர,பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள் அனைத்து ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கிளை, வார்டு கழகச் செயலாளர்கள், பிரதிநிதிகள், வாக்குச்சாவடி முகவர்கள்,பூத் கமிட்டி உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் இந்தியா கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள், கழகத் தோழர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தென்காசி வடக்கு மாவட்டக் கழக செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

### ஜூன் 15 ஆம் தேதி கோவையில் முப்பெரும் விழா!

# நெல்லை மத்திய மாவட்டக் கழக நிர்வாகிகள் திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் அறிக்கை!



நெல்லை, ஜூன் 13 - ஜூன் 15 ம் தேதி கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் மாலை 400 மணி அளவில் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சி தலைவர்கள் கலந்து கொள்ளும் "முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில்" நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க.சார்பில் கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் பெரும் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அது பற்றிய விவரம் வருமாறு.

தமிழினத்தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை கழகத் தலைவர், முதல்வர் வழிகாட்டுதல் படி கடந்த ஓராண்டு காலமாக சீரோடும் சிறப்போடும் கொண்டாடினோம். அதன்படி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, இந்தியாவே திரும்பி பார்க்கின்ற வெற்றியை தமிழ்நாட்டில் நாற்பதுக்கு நாற்பது வழங்கிய தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவித்தும்,

இந்தியாவே திரும்பி பார்க்கும் இந்த வரலாற்று சிறப்பு மிக்க வெற்றிக்கு நம்மை அழைத்து சென்ற கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களுக்கு பாராட்டு விழா ஆகிய மூன்றையும் இணைத்து வருகிற 15.06.2024 சனிக்கிழமை அன்று மாலை 4.00 மணிக்கு கோயம்புத்தூர் கொடிசியா வளாகத்தில் நடைபெறும்,முப்பெரும் விழாவிற்கு நெல்லை மத்திய மாவட்டத்தில் உள்ள தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, பகுதி, ஒன்றிய, பேரூர், வட்ட, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், பாகமுகவர்கள், கழக சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,கழகத் தோழர்கள் என அனைவரும் பெரும் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்திட கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு நெல்லை மத்திய மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் தெரிவித்துள்ளார்.

# தி.மு.கழக முப்பெரும் விழாவில் பெருந்திரளாகப் பங்கேற்போம்!

## பூண்டி கே.கலைவாணன் பங்கேற்ற மாவட்ட செயல்வீரர்கள் கூட்டத்தில் தீர்மானம்!

திருவாரூர், ஜூன் 13. கோவையில் நடைபெறும் தி.மு.கழக முப்பெரும் விழாவில் திருவாரூர் மாவட்டம் சார்பில் பெருமளவில் பங்கேற்போம் என திருவாரூர் மாவட்ட தி.மு.கழக செயல்வீரர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாவட்ட அவைத்தலைவர் க.தன்ராஜ் தலைமையிலும் மாவட்ட துணை செயலாளர்கள் எம்.எஸ்.கார்த்திக், எம்.ராமகிருஷ்ணன், சாந்தி பாஸ்கர் ,தலைமை செயற்குழு உறுப்பினர் ஞானசேகரன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்ற செயல்வீரர்கள் கூட்டத் தில் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ.,பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள்,

இந்திய துணைக் கண்டமே திரும்பிப்பார்க்கும் ஒப்பாரும் மிக்காரும் இல்லா முதல்வராக , இந்தியாவின் பிறமாநிலங்கள் பின்பற்றும் வகையில் எண்ணற்ற நலத்திட்ட வகையில் மக்கள் நலத்திட்ட தந்து தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி உள்ளிட்ட 40இடங்களிலும் அமோக வெற்றியை ஈட்டிய இந்தியா கூட்டணியின் நாயகர் கழக தலைவர் திராவிட நாயகர் தளபதி அவர்களுக்கு திருவாரூர் மாவட்ட கழகம் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்து, கழக தலைவர் தலைமையில் 2026 தேர்தலிலும் வரலாற்று சிறப்புமிக்க வெற்றியை பெறவாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வது.

கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்களின்படி கோவையில் நடைபெறும் முப்பெரும் விழாவில் திருவாரூர் மாவட்ட சார்பில் பெருந்திரளாக பங்கேற்பது.

தமிழ்நாடு முழுவதும் நாற்பதுக்கும் நாற்பதை வெற்றியாக கொடுத்த மக்களுக்கு நன்றிகளை தெரிவிப்பதோடு, திருவாரூர் மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர், மற்றும் கிளை, வார்டு கழக மக்களுக்கு நன்றிகளை தெரிவிக்க நிர்வாகிகள் தகுந்த ஏற்பாடுகளை உடனடியாக செய்வது.

அனைத்து இடங்களிலும் தி.மு.கழகத்தின் பெருமையாம் இருவண்ண கொடி மேடைகளை அமைக்க அரசு விதி களின் படி இடங்களை தேர்வு செய்து கருப்பு சிவப்பு கொடிகளை ஏற்றுவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் தி.மு.க. மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் பங்கேறனர்.



கோவை வடக்கு மாவட்ட மாணவர் அணி தி.மு.க. சார்பில் என்.ஜி.பி. கல்லூரி, கிருஷ்ணா கல்லூரி, கற்பகம் கல்லூரி, கே.பி.ஆர். கல்லூரி மாணவர்கள் நூற்றுக்கு மேற்பட்டோர் கோவை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் தொ.ரவி தலைமையில், கோவை வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் செ.அந்தோணிராஜ் முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் பூவை சி.ஜெரால்டு, மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் வி.ஜி.கோகுல் , மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் ஞா.சிவகுமார் ஆகியோர் கலந்து கொண்டு மாணவரணியில் புதிதாக இணைந்தவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்தனர்.

### "ஜூன் 15ல் கோவையில் முப்பெரும் விழா:"

# மதுரை மாநகர் மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிக்கை!



மதுரை, ஜூன் 13- மதுரை மாநகர் மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கோ.தளபதி விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஜூன் 15 சனிக்கிழமை மாலை 4.00மணியளவில் கோயமுத்தூர் கொடிசியா மைதானத்தில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நுற்றாண்டு நிறைவு விழா - நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா - மாபெரும் வெற்றிக்கு கழகத்தை வழிநடத்திச் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்கு பாராட்டு விழா என முப்பெரும் விழா நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில்பகுதி, வட்ட, ஒன்றிய, பேரூர், கிளை கழக செயலாளர்கள் கழக நிர்வாகிகள் பாக முகவர்களை ஒன்றிணைத்து முப்பெரும் விழாவில் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும்.

மேலும் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் கோ. தளபதி எம்.எல்.ஏ. கேட்டுக்கொண்டுள்ளார்.



தருமபுரி மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் ஆலோசனைப்படி பி.பள்ளிப்பட்டி ஊராட்சிமன்ற தலைவர் திருமலாதினேஷ் ஏற்பாட்டில் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் பி.எஸ்.சரவணன் தலைமையில் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றியம் பி.பள்ளிப்பட்டி, ஊராட்சியில் கலைஞர் 101 நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் தருமபுரி நாடாளுமன்றத் தேர்தலில் கழக வெற்றிக்கு வாக்களித்த பொதுமக்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் கழகக் கொடியேற்றி பொது மக்களுக்கு இனிப்பு மற்றும் உணவு வழங்கும் விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ஒன்றிய கழக துணை செயலாளர் ஜாகிதாசெரீப்,மற்றும் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.